International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 2 April - June 2026

Published on 14, April - June 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# வ. உ. சிதம்பரம் பிள்ளை கட்டுரைத்திறம்

**முனைவர் ம. தாமரைச் செல்வி**
இணைப்பேராசிரியர் - தமிழ்த்துறை
ஒருங்கிணைப்பாளர் - பிறமொழிகள் துறை
அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி (சுழற்சி - II)
மீனம்பாக்கம், சென்னை- 600 061

**ஆய்வுச்சுருக்கம்**

கட்டுரை என்பது எழுதுபவரின் எழுத்தாளுமையை வெளிப்படுத்தி நிற்பது. பொருண்மையும் எழுத்தாளுமையும் இணையும் போதே கட்டுரை சிறப்புடையதாக அமையும். எழுத்தாண்மைச் சிறப்புகளோடு விளங்கிய கட்டுரைகளை வ.உ.சி. பல்வேறு காலகட்டங்களில் எழுதியுள்ளார். ஏறக்குறைய முப்பத்தேழு ஆண்டுகளில் வ.உ.சி. யின் கட்டுரைகள் பல்வேறு துறைகள் சார்ந்து வெளிவந்துள்ளன. ஆன்மிகம், அரசியல், வாழ்க்கை வரலாறு. மொழி, இலக்கியம், பொது போன்ற தலைப்புகளில் வ.உ.சி.யின் கட்டுரைகளை வகைப்படுத்தலாம். இங்கு ஆன்மிகம், அரசியல், வாழ்க்கை வரலாறு பற்றிய வ.உ.சி.யின் கட்டுரைகளின் மூலம் அவருடைய கட்டுரைத் திறன் எடுத்துரைக்கப்பெறுகிறது.

**முதன்மைச் சொற்கள்**

ஆன்மீகம்- அரசியல் – வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரைகள்.

## முன்னுரை

நமது நாடு உரிமையோடு விளங்க வேண்டுமானால் முதலாவதாக அதன் பொருளாதாரச் சுரண்டலைத் தடுக்க வேண்டும். இரண்டவதாகத் தாய்மொழியின் வாயிலாக அறிவை வளர்க்க வேண்டும். இந்த இரண்டும் எல்லா நாடுகளுக்கும் பொதுவான உண்மை, இதை நன்றாக உணர்ந்து வாழ்க்கையில் காட்டித் தொண்டு செய்தவர் வ. உ. சிதம்பரம் பிள்ளை. வந்தே மாதரம் என்கிற தாரக மந்திரத்தைத் தம் வாழ்நாள் மூச்சாகக் கொண்டு வாழ்ந்த வ. உ. சி. அன்னைத் தமிழில் ஆக்கியளித்த நூல்களில் அவர்தம் வரலாற்று ஆவணமாகத் திகழும் கட்டுரைகள் தாய்நாட்டின் நிலையையும் தாய்த்தமிழின் சிறப்பையும் பறைசாற்றி நிற்கின்றன.

## ஆன்மீகக் கட்டுரைகள்

வ.உ.சி. வேதாந்தத்தை விளக்கும் கைவல்யம், விசாரசாகரம் என்னும் பெரும் தத்துவ நூல்களைக் கசடறக் கற்றுத் தேர்ந்தவர். ஞானவாசிட்டம் எனும் வேதாந்தத் தத்துவ நூலை மதுரை ஸ்ரீ பிரமானந்த சுவாமிகள் மடத்தின் தலைவர் ஸ்ரீ சோம சுந்தர சுவாமிகளிடம் கற்றவர். தூத்துக்குடியில் தெய்வப் பேரவையில் இளம் வயதில் சேர்ந்து சமயச் சொற்பொழிவு செய்தவர். தூத்துக்குடி மேலூர் பகுதியில் திருஞானசம்பந்தர் மடாலயத்தில்

சைவசித்தாந்த சபை என்ற சபையைச் சிவகுருநாத பிள்ளை போன்ற நண்பர்களின் துணையோடு நிறுவியவர். கைவல்யம் கற்பிக்க அங்கு வகுப்புகளை நடத்தியவர்.[1] இந்த ஆன்மீகப் பின்னணியின் அடிப்படையில் அறியப்பெற வேண்டியவையே வ.உ.சி.யின் ஆன்மிகக் கட்டுரைகள். எதையும் எளிய முறையில் படிப்பவர், எளிதில் உணர்ந்து பயன் பெறும் விதத்தில் சொல்ல வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தவர். கடினமான செய்தியையும் எளிதில் புரிந்துகொண்டு நடைமுறைப்படுத்தும் வகையில் தம் படைப்புகள் இருக்க வேண்டும் என்று எண்ணிச் செயல்பட்டவர் அவர். கடவுள்பற்றிய சிந்தனையாயினும் வாழ்வியல் பற்றியதாயினும் வேறு எப்பொருள் பற்றிய சிந்தனையாக இருந்தாலும் அதில் எளிமையும் தெளிவும் வ.உ.சியின் தனித்தன்மைகளாக வெளிப்படும் "எல்லா மதத்தவரும் ஒரே கடவுளைத்தான் வணங்குகிறாரென அவர் அறிகின்றிலர். தமது மதத்திற்குரிய கடவுளே உண்மையானவரென்றும் பிற மதத்தவருடைய கடவுள் உண்மையல்லாதவரென்றும் அவர் நினைக்கின்றனர். அவ்வெண்ணந்தான் இவ்வளவு விபரீதங்களையும் விளைவிக்கிறது.[2] என்று நூறு ஆண்டுகளுக்கு முன்பு வ.உ.சி. கூறியது இன்றைக்கும் இனி வரும் காலங்களுக்கும் பொருந்தும் உண்மையாய் நின்று விளங்குகிறது.

“ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு காலத்தில் தோன்றிய ஒவ்வொரு பெரியவருடைய அறிவு விளக்கமேயன்றி வேறன்று. ஒருவர் அறிவுக்கு மற்றொருவர் அறிவு எல்லா விஷயங்களிலும் பொருத்தமுடையதாக இருக்குமா? சில விஷயங்களில் பொருத்தமின்றித்தானே இருக்கக்கூடும். அது பற்றிச் சுதேசத்தாருக்குள் சகோதர வாஞ்சையைக் குறைப்பது நியாயமா?[3] மதங்களுக்கு இடையே நிலவும் சிந்தனை வேறுபாடுகளுக்கான காரணங்களை எடுத்துக்காட்டி, அது இயல்பானதுதானே என்பதை விளக்கி, இந்த அடிப்படை உண்மையைப் புரிந்து கொள்ளாமல் முரண்படுவது ஏன் என்று வினவுகிறார். மதத்தை முதன்மைப்படுத்தி, 'சுதேசத்தாருக்குள் சகோதர வாஞ்சையைக் குறைப்பது நியாயமா?' என்று உண்மையான நாட்டுணர்வுச் சிந்தனையோடு வருந்தியது வ.உ.சி.யின் உள்ளம். 'யான்' என்னும் பற்றிலிருந்து விலகும் போது, மனிதன் தன்னுள்ளேயே இறைவனைக் காண இயலும் என்கிறார் வ.உ.சி. ஒவ்வொரு மனிதனும் தன்னை உணர வேண்டும் என்பதையும் தன்னை உணர்ந்தால் தன்னுள் உறையும் இறை ஆற்றலைக் கண்டறிந்து தன்னைத் தானே அறிதல் இயலும் என்பதையும் அனுபவத்தில் அறிந்தவர் அவர். ஆழ்ந்த வேதாந்தப் பயிற்சியும் ஆன்மீகத் தெளிவும் உடையவரான வ.உ.சி. தாம் அறிந்த அந்தப் பேருண்மையைப் பிறரும் அறிந்து பயன்பெற வேண்டும் என்று விரும்பியவர். அந்த விருப்பம் அவருடைய ஆன்மிகக் கட்டுரைகளில் பல இடங்களில் வெளிப்பட்டுள்ளது.

‘**மனிதனும் அறிவும்**’ என்னும் கட்டுரையில் 'சிறப்பும் பெருமையும் அருமையும் உடையவனான மனிதன் செய்ய வேண்டிய கடமைகள் சிலவுள' என்று கூறும் வ. உ. சி. அவற்றுள் தலையாயது 'மனிதன் தன்னை அறியும் அறிவே' என்று குறிப்பிட்டு அதனைப் பின்வருமாறு விளக்குகின்றார்.

நாம் 'மனிதன்' என்று சொல்லும் பொருளின் கண் 'அறிவு' என்னும் ஒருபொருளும் 'மனம்' என்னும் ஒரு பொருளும் 'உடம்பு' என்னும் ஒரு பொருளும் ஆகிய மூன்றும் விளங்கக் காண்கிறோம்.

'உடம்பு' என்பது எலும்பு, நரம்பு, தசை, இரத்தம் முதலியவற்றின் சேர்க்கைப் பிண்டமாய், மனமும் அறிவும் தங்குதற்கு ஒரு களனாய் உடம்பின் புறத்திலுள்ள பொருள்களுடன் மனம் சம்பந்தப்படுவதற்குரிய பொறிவாயில்களைக்கொண்டு நிற்கும் ஒரு கருவி. 'மனம்' என்பது நினைத்தல், அறிதல், மறத்தல், ஆக்கல், அளித்தல், அழித்தல் முதலியவற்றைச் செய்வதாய், அறிவை முதலாகக் கொண்டு உடம்பின்கண் தங்கி, அதன் பொறிவாயில் மூலமாக அதனையும் அதன் அகத்தினும் புறத்தினுமுள்ள பொருள்களையும் தொழில்படுத்தும் ஒரு சூட்சும சக்தி.

'அறிவு' என்பது மனதுக்கும் உடம்புக்கும் முதலாக நின்று மனத்தையும் உடம்பையும் தீநெறிகளில் செல்லவிடாது விலக்கி நன்னெறிகளிற்செலுத்தும் சுயம்புப் பொருள்.[4] என்று 'உடம்பு', 'மனம்', 'அறிவு' ஆகியவற்றை விளக்கிய வ.உ.சி. அறிவின் பணி என்ன

என்பதைத் தெளிவுபட விளக்கியுள்ளார்.

'அறிவு, தான் விரும்பிய அறத்தைச் செய்து முடிக்கும் முன்னர் கவனமின்றி மனத்தை ஆளுந்தொழிலைச் சற்று நழுவவிடுமாயின் மனம் தன்போக்கில் ஓடித் தீ நெறிகளில் பட்டுத்தானும் கெட்டு உடம்பையும் அறத்தையும் கெடுத்துவிடும்'.[5] இதில் 'மனத்தை ஆளும் தொழில்' என்னும் வரியை உற்று நோக்கினால், அறிவின் கடமை மனத்தை ஆளுதல்; அதாவது, மனதைச் செய்யும் பணியில் ஒருமுகப்படுத்துதல் என்று விளக்குகிறார். அறிவின் வழியே மனத்தை ஆளவேண்டும் என்று வழிப்படுத்தும் வ.உ.சி. அதன் விளைவாக அமையும் நன்மையையும் குறிப்பிடத் தவறவில்லை.

"அறிவு அறங்களைக் காட்டும். அறிவு காட்டும் அறங்களையே மனம் நினைக்கும்படி அதனை ஆள வேண்டும். இவ்வாறு அறிவு காட்டும் அறங்களையே மனம் நினைத்தும், உடம்பு செய்தும் வருமாயின் மனிதரெல்லாம் இன்பத்தையே அடைவாரென்பது திண்ணம்'.[6] அறங்களை எண்ணவும் செய்யவும் மனம் நல்ல நிலைமையிலும் உடம்பு ஆரோக்கியமான சூழலிலும் இருக்க வேண்டும். அதற்கான வழி எதுவாக இருக்க முடியும் என்பதைக் கூறுகிறார் வ.உ.சி.

"மனம் நல்ல நிலைமையில் இருப்பதற்குத் தீயனவற்றை முற்றும் விலக்கி ஆரோக்கியத்திற்கொத்த நல்ல உணவு முதலியனவற்றையே, பசித்த பின்னர் அளவறிந்து உட்கொள்ளல் வேண்டும். நல்லோர் உறவும் பசித்து உண்ணுதலுமே மனமும் உடம்பும் நன்னிலையில் இருத்தற்கும் இயங்குதற்கும் ஏற்ற வழி என்று வ.உ.சி. கூறுவது எவ்வளவு பொருத்தமானது என்பதை அவ்விரண்டையும் நடைமுறையில் கடைப்பிடிப்பவர்கள் தம் அனுபவத்தால் உணர்ந்து கொள்ள முடியும். 'வினை' என்பதையும் 'விதி' என்பதையும் பற்றி எண்ணிப் பார்க்கும் வ.உ.சி. இரண்டின் செயற்பாடுகளையும் விவரிக்கிறார். மனம், நா, உடம்பு இம்மூன்றன் தொழிலுக்கும் வினையென்று பெயர். அதாவது. நினைத்தலும் சொல்லலும் செய்தலும் வினையாம். நினைக்க வேண்டியதை நினையாது விடுதலும் சொல்ல வேண்டியதைச் சொல்லாது விடுதலும் செய்ய வேண்டியதைச் செய்யாது விடுதலும் வினையென்றே கொள்ளப்படும்"[7] என்று வினையையும், "நினைப்பும் சொல்லும் செயலும் முதிர்ச்சியடைந்து அதனதன் பயனை அளிக்கும் பொழுது விதியென்னும் பெயரைப் பெறுகின்றது"[8] என்று விதியையும் விளக்குகின்றார்.

அரசியலைப் போலவே ஆன்மிகத்திலும் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர் வ.உ.சி. நாட்டுணர்வு எந்த அளவிற்கு இன்றியமையாதது என்று கருதினாரோ, அதே அளவு தனிமனித ஒழுக்க மேம்பாடு தேவை என்று கருதினார். அவருடைய ஆன்மிகச் சிந்தனைகள் எல்லாம் பெரும்பாலும் தனிமனித ஒழுக்கம் மற்றும் தனிமனித மேம்பாடு பற்றியதாகவே அமைந்தன. மனிதன் அறிவின் துணையோடு தன் மனத்தை ஆளும் வல்லமையைப் பெற வேண்டும் என்பதே அவருடைய எதிர்பார்ப்பாக இருந்தது. தனிமனிதன் தன்னை எவ்வாறெல்லாம் உயர்த்திக் கொள்ள முடியும் என்று நம்பினாரோ, உயர்த்திக் கொள்ள வேண்டும் என்று விரும்பினாரோ அவற்றையெல்லாம் தம் ஆன்மீகக் கட்டுரைகளில் பதிவு செய்துள்ளார்.

வ.உ.சி.யின் கட்டுரைகளில் ஆன்மிகம் பற்றிய கட்டுரைகளே மிகுதி. அவர் எழுதிய பத்தொன்பது கட்டுரைகளில் எட்டு ஆன்மிகம் பற்றியவை என்பதே ஒழுக்க நெறிகளில் தனிமனித ஆளுமை வளர்ச்சியில் வ.உ.சி.க்கு இருந்த ஈடுபாட்டைப் புலப்படுத்தும். வ.உ.சி யின் முதல் கட்டுரை, 'கடவுளும் பக்தியும்' (செப்டம்பர்-1900); அவர் எழுதி வெளிவந்த கடைசிக் கட்டுரை 'உலகமும் கடவுளும்' (சனவரி 1936). 'மதம்' பற்றியும் கடவுள்' பற்றியும் அவர் எழுதியுள்ள கட்டுரைகள், தனிமனிதர்கள் தம்மை நெறிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காகவும் உண்மை வாழ்க்கை எது என்ற பக்குவம் பெற வேண்டும் என்ற நோக்கில் எழுதப் பட்டவையே.

**அரசியல் கட்டுரைகள்**

வ.உ.சி.யின் சுதேசாபிமானம், சுதேச ஸ்டீமர் விக்ஞாபனம் போன்ற அரசியல் கட்டுரைகள் தனித்தன்மை வாய்ந்தவை. வ.உ.சி.யின் முதல் அரசியல் கட்டுரையான 'சுதேசாபிமானம்' ஆரம்ப அரசியல் அறிவைப் புகட்டுவதற்காக எழுதப்பட்டது. அவரின் சீரிய சிந்தனைகளுள்

ஒரு பகுதியாகத் திகழ்பவையே நாட்டு ஒருமைப்பாடு குறித்த சிந்தனைகள். அவரது நாட்டொருமைச் சிந்தனை அறிவார்ந்தது; காரணகாரியத் தொடர்புடையது. அவற்றின் சாரமாக அமைந்ததே 'சுதேசாபிமானம்' என்னும் கட்டுரை. தாய்நாட்டின் பெருமை உரியவாறு உணரப் பெற வேண்டும் என்று கருதியவர் வ.உ.சி. அதனால்தான், "ஒருவர் பிறப்பதற்கு ஆதாரமாயிருந்தவள் அவருக்குத் தாயென்றால்அவரும் அவருடைய முன்னோரும் பிறப்பதற்கு ஆதாரமாயிருந்த தேசம் அவரைப் பெற்ற தாயினும் மேலென்பதற்குத் தடையென்னை?"[9] என்று வினவுகிறார்.

தாயினும் மேலானதாக அவர் போற்றிய நாடு அந்நியரிடம் அடிமைப்பட்டிருந்த நிலை அவரைப் பெரிதும் கவலை கொள்ளச் செய்தன. அவ்வடிமைத்தனத்தை நீக்க அவர் மேற்கொண்ட முயற்சிகளும் சந்திக்க நேர்ந்த இன்னல்களும் வரலாற்றுப் பதிவுகள். அவருடைய அனுபவங்களே, "வறுமையினும் வியாதியினும் சகிக்கொணாக்கொடியது அடிமைத்தனமே"[10] என்று அடிமைத்தனத்தின் கொடுமையைத் துல்லியமாகப் பேச வைத்தன. அரசியல் தெளிவைப் போன்றே, ஆன்மிகச் சிந்தனை போன்றே இலக்கியப் புலமையைப் போன்றே, வ.உ.சி.யின் பொருளியல் சிந்தனையும் அனைவரையும் சிந்திக்கத் தூண்டுவது. ஆங்கிலேயருக்கு எதிராக அவர் கப்பல் கம்பெனி தொடங்கியதும் தூத்துக்குடிக்கும் கொழும்பிற்கும் இடையே கப்பல் ஓட்டியதும் வரலாற்று நிகழ்வுகள். வ.உ.சி யின் பொருளியல் சிந்தனையின் வெளிப்பாடே கப்பல் ஓட்டியமை. கப்பல் கம்பெனி தொடங்கவும் அதை நடத்தவும் வணிக ரீதியில் ஆங்கிலேயரை வென்று நிற்கவும் அவர் உழைத்த உழைப்பும் மேற்கொண்ட பயணங்களும் நிகழ்த்திய சொற்பொழிவுகளும் அவற்றின் விளைவாக இந்தியத் திருநாடே வ.உ.சி. என்னும் மனிதரை ஓர் இயக்கமாகவே வியப்போடு நிமிர்ந்து நோக்கியமையும் இந்திய விடுதலை இயக்க வரலாற்றில் தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்த நிகழ்வுகள். அந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க காலகட்டத்தில் வ.உ.சி. எழுதிய கட்டுரைதான், 'சுதேச ஸ்டீமர் விக்ஞாபனம்' என்பதாகும்.

"அந்நிய நாட்டார் பிரவேசித்த காரணத்தால் சகல கைத்தொழில்களையும் வியாபாரங்களையுமிழந்து மிக்க வறுமையுற்றுப் பசியால் வருந்தி இறந்து கஷ்டப்படுவதைக் கண்ணுற்ற சர்வ இரக்ஷகராகிய கடவுளானவர் சென்ற 1905ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 7ஆம் தேதி முதல் நம் சுதேசத் தாயின்மீது கருணைகூர்ந்து 'சுதேசக் கிளர்ச்சி'யை உண்டாக்கி நாம் நீடித்த நாளாக இழந்திருந்த ஒற்றுமையையும் ஊக்கத்தையும் கைத் தொழில்களையும் வியாபாரங்களையும் நம்மைக் கைக்கொள்ளும்படிச் செய்து நன்மை புரிந்து வருகின்றதை நாமெல்லோரும் அறிந்திருக்கின்றோம்".[11]

இக்கட்டுரையில் வ.உ.சி. சுட்டிச் செல்லும் கப்பல் ஓட்டுதல் தொடர்பான செலவினங்கள் வரவு செலவு கணக்கு விவரம் அத்துறையில் மிகக் குறுகிய காலத்தில் அவர் பெற்றிருந்த பயிற்சியைத் தெளிவை உணர்த்துகின்றது. அவர் குறிப்பிடும் செலவினங்களுள் சில அறியத்தக்கன.

"டெக்கின் 'குறு'வாகிய சிறிய வேலைக்காரரின் சம்பளம். தூத்துக்குடியிலும் கொழும்பிலும் பைலட்டுக்கூலி, நங்கூர வாடகை, தீப வாடகை முதலியன. சரக்குகள் ஏற்றும் இறக்கும் வேலைக்காரர்களாகிய ஸ்டீவ்டோரின் சம்பளம் வருஷம் 1க்கு... தூத்துக்குடி ஸ்டீமர் ஆபீஸ் சிப்பந்திச் சம்பளச் செலவு கொழும்பு ஸ்டீமர் ஆபீஸ் சிப்பந்திச் சம்பளச் செலவு தூத்துக்குடி வ.உ.சிதம்பரம் பிள்ளை"[12] 04.10.1906 தூத்துக்குடியிலும் கொழும்பிலும் அலுவலகம் உருவாக்கிக் கப்பல் போக்குவரத்தை நிர்வகிக்கும் பணியை மேற்கொண்டமை - கப்பல் தொழிலோடு தொடர்புடைய தொழில் நுட்பம் அறிந்து செயல்பட்ட பாங்கு, 'குறு', 'ஸ்டீவ்டோர் முதலிய பல்வேறு பிரிவினரான பணியாளர் பற்றிய தகவல்கள் அறிந்து தம்மைக் கப்பல்தொழில் சார்ந்த பணிகளில் பயிற்சியுடையவராக மேம்படுத்திக் கொண்டமை இவையெல்லாம் எவ்வளவு பெரிய நிர்வாகத்தை அவர் முன்னின்று வழிநடத்தியிருக்கிறார் என்பதைப் புலப்படுத்தி நிற்கின்றன. வ.உ.சி.யின் இவ்வரிய பணிகள் மிகச்சிறிய கட்டுரையான 'சுதேச ஸ்டீமர் விக்ஞாபனம்' மிக அரிய செய்திகளை உள்ளடக்கி இமாலயச் சிந்தனையான வ.உ.சியின் பொருளியல் சிந்தனை என்னும் பேருருக் காட்டி, விவேகபாநு இதழின்

பக்கங்களில் பொதிந்து கிடக்கிறது.

**வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரைகள்**

தமிழைப் பொறுத்தவரையில் அறிஞர் மற்றும் தலைவர்களின் 'வாழ்க்கை வரலாறு' என்பது முறையாகத் தொகுக்கப் பெறாத நிலையிலேயே இன்றும் இருந்து வருகிறது. அரிய சாதனைகள் பல நிகழ்த்தி வரலாற்றில் இடம்பெற்ற பலரின் வாழ்க்கைக் குறிப்புகள் கூட முழுமையாகக் கிடைப்பது இல்லை என்பதே இன்றைய நிலை. தம்முடைய தன்னலமற்ற சேவைகளால் வரலாற்றில் தடம் பதித்தவரான வ.உ.சி. வாழ்க்கை வரலாறுகள் எழுதப் பெற வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தவர். அதனால் தான் தம்முடைய அரசியல் குருவாக மதித்துப் போற்றிய திலகரின் வாழ்க்கையை அவர் வரலாறாக்கியுள்ளார்.

"லோகமானிய பாலகங்காதர திலகர் என் அரசியல் குரு ஆவார். எனது 21 ஆவது வயதிலிருந்து, அதாவது 1893 லிருந்து அரசியலைப் பற்றிய அவருடைய பேச்சுக் களையும் எழுத்துக்களையும் நான் கவனித்து வந்தேன். இந்தியா எனது நாடு, அநியாயமான வகையில் பிரிட்டிஷார் தம் வசம் நம் நாட்டை வைத்துள்ளனர். நம் நாட்டை அவர்களிடமிருந்து திரும்பப் பெற வேண்டும் என்று அவை எனக்கு உணர்த்தின."[13] 1893ஆம் ஆண்டு கால கட்டம் முதற்கொண்டு திலகரிடம் ஏற்பட்ட ஈடுபாடு, அவருடைய மறைவுக்குப் பிறகும் வ.உ.சி. தம் இறுதிக்காலம் வரையிலும் மாறாத ஒன்றாகவே இருந்தது. திலகரின் மறைவுக்குப் பின் அவருடைய நண்பர்களால் தொகுக்கப் பெற்ற ***திலகர் நினைவுகள்*** (Reminiscences of Lokamanya Tilak) என்னும் தொகுப்பின் மூன்றாம் தொகுதியில் திலகரோடு பழகிய அனுபவங்களை மனம் திறந்து பகிர்ந்து கொண்டுள்ளார் வ.உ.சி. திலகரின் வாழ்க்கை வரலாற்றைத் தமிழில் எழுதும் வாய்ப்பு 1933இல் அவருக்குக் கிடைத்தது. இன்றும் இலங்கையில் இருந்து வெளிவரும் வீரகேசரி என்னும் நாளிதழில் தான் திலகரின் வாழ்க்கை வரலாற்றை வ.உ.சி. எழுதி வந்தார். ஞாயிறுதோறும் வெளிவந்த அந்தத் தொடர் 28-05-1933இல் தொடங்கியது. 'பாரத ஜோதி ஸ்ரீதிலக மகரிஷியின் வரலாறு' என்னும் தலைப்பில் அமைந்த அவ்வாழ்க்கை வரலாறு முழுமை யாகக் கிடைக்கவில்லை பதினேழு நாள்கள் (ஞாயிறுதோறும்) வெளி வந்த பகுதிகள் தொடர்ச்சி இல்லாமல் கிடைத்துள்ளன. கிடைத்துள்ள தரவுகளின் அடிப்படையில் வ.உ.சி.யின் 'திலக மகரிஷியின் வரலாறு' இங்குப் பதிவு செய்யப் பெறுகிறது.

“அத்தேசாபிமானியின் துன்பமான வாழ்க்கையைப்பற்றி எழுதப்பட்டுள்ள விஷயங்களை ஜாக்கிரதையோடு படித்த ஒருவரால் எழுதப்பெற்ற அவரது சுருக்கமான ஜீவிய சரித்திரத்தை அவர் பெயரைப் போற்றும் கோடிக் கணக்கான மனிதர்கள் விரும்புகின்றார்கள். அத்தகைய சரித்திரத் தையே யான் எழுத எத்தனிக்கின்றேன்”.[14] என்று திலகரின் வாழ்க்கை வரலாற்றைத் தொடங்குகிறார் வ.உ.சி. தனிமனிதனின் ஆளுமை உருவாக்கம் என்பது அவனுடைய சிறுவயதிலிருந்தே தொடங்கி விடுகிறது. அந்தத் தனிமனிதன் அதை உணர்ந்தோ, உணராமலோ அந்தச் சிறுவயதிலேயே அதில் கலந்து விடுகிறான் என்பது மனித வாழ்க்கை உணர்த்தும் உண்மையாகும். திலகரும் இந்தப் பொது நியதிக்கு உட்பட்டவராகவே விளங்கினார் என்று வ.உ. சி. குறிப்பிடுகின்றார்.

"திலகர் தமது தகப்பனாரிடமிருந்து அவருடைய உறுதியான யோக்கிய உணர்ச்சியையும் சுதந்திர உணர்ச்சியையும் தமது தாயாரிடமிருந்து அவருடைய தெய்வ பக்தியையும் ஜீவகாருண்ணியத்தையும் இயற்கையாக அடைந்தனர்"[15]

'மேலான அறிவுத் திறனும்' 'வளையாத தர்க்க வன்மையும்' 'தெளிந்த சட்ட ஞானமும்' நிறைந்தவரான திலகர், நாட்டுக்கு ழைத்தல் என்னும் பொதுவாழ்வில் நுழைதற்கு எது முதன்மையான காரணமாக அமைந்தது என்பதைப் பின்வருமாறு வ.உ.சி. கூறுகிறார்:

"அன்னிய தேசத்தாரின் ஆளுகைக்குட்பட்ட இந்தியாவில், அவர் காலத்தில் நடந்த சில சம்பவங்கள் அவருடைய தேசத்தின் ஆதரவற்ற தன்மையைப் பற்றி அவருடைய மனத்தில் மங்காத ஓர் எண்ணத்தை உண்டு பண்ணின. அன்னியர் ஆள்கையால் ஏற்பட்ட தமது தேசத்தவரின் நயவஞ்சகத் தன்மை யைத் திலகர் வருத்தத்தோடும் வெறுப்

போடும் உணர்ந்தார்"[16] என்று கூறும் வ.உ.சி. அந்நியர் ஆட்சிக்கு எதிரான திலகரின் செயற்பாடுகளின் படிநிலைகளை மிகுந்த வரலாற்றுணர்வோடு பதிவு செய்துள்ளார்.

“ஆங்கில ஆட்சியானது ஏற்படுத்தியிருந்த கல்வித் திட்டமும் வேலை (உத்தியோக) அமைப்பு முறையும் நாட்டுப்பற்றை அடியோடு ஒழிக்கும் நோக்கில் உருவாக்கப் பெற்றவை என்பதைத் தெளிவாக உணர்ந்த வரான திலகர், தம் நாட்டின் சீரமைப்பைத் 'தேசியக் கல்வி' என்பதிலிருந்து தொடங்கி னார்” என்று குறிப்பிடுகிறார் வ.உ.சி.[17] அத்துடன், தேசியத் தத்துவத்தையும் குடியாட்சித் தத்துவத்தையும் தமது நாட்டு மக்களின் உள்ளத்தில் புகுத்துவதற்கும் தம்முடைய கல்விப் பணி சார்ந்த முயற்சிகளைக் கருவியாகப் பயன்படுத்திக் கொண்டார் என்றும் விளக்குகின்றார்.

ஒருபுறம், தேசியக் கல்வியைக் கற்றுத் தருவதன் மூலம் நாட்டுணர்வை ஊட்டும் பணியில் ஈடுபட்ட திலகர், இன்னொருபுறம் ஆங்கிலப் பழக்க வழக்கங்களிலும் நாகரிக மோகத்திலும் மூழ்கிக் கிடந்த இந்தியர் சிலர் எழுப்பிய வாதங்களை இந்தியச் சமுதாயத் தில் அவர்கள் கொண்டு வர வேண்டும் என்று விரும்பிய மாற்றங்களை இந்தியச் சூழலுக்குப் பொருந்தாத நடைமுறைகளை எதிர்த்துப் போராட வேண்டிய நிலையிலும் இருந்தார் என்று கூறுகிறார் வ.உ.சி. ஆங்கில மோகங்கொண்டு ஆங்கிலேயரைப் போலவே மாறி ஆங்கிலேயராகவே தங்களை எண்ணிக் கொண்டு நடிக்கும் இந்தியரின் போக்குத் திலகருக்குப் பிடிக்கவில்லை என்பதைக் கூறுவதற்கு வ.உ.சி. பயன் படுத்தும் தொடர் அறிய வேண்டியதாகும்.

“இந்தச் சுயமயக்க பித்தலாட்டக்காரர்களின் இரவல் சுவிசேஷங்கள் திலகருக்குப் பிடிக்க வில்லை”.[18] திலகர் 1893இல் அறிமுகம் செய்த கணபதி விழாவும் 1895இல் நடத்திய சிவாஜி விழாவும் இந்திய விடுதலை இயக்கத்தின் போக்கையே மாற்றிப் புதிய வரலாற்றைத் தொடங்கி வைத்த மகத்தான நிகழ்வுகள். திலகரின் அரசியல் வாழ்விலும் திருப்பத்தை உண்டாக்கிய அந்நிகழ்ச்சிகள் ஏற்படுத்திய மக்கள் எழுச்சியையும் அதன் விளைவான ஆங்கில அரசின் கவலையையும் வ.உ.சி. மிகுந்த கவனத்துடன் அந்நிகழ்வு களின் இயல்பு சிதையாமல் காட்சிப்படுத்தி உள்ளார். “மகாராஷ்டிர ஜனங்களை உயிர்ப் பித்த உற்சவங்கள்” என்று தலைப்பிட்டு வ.உ.சி. எழுதியுள்ள இப்பொருண்மை சமகால வரலாற்று நிகழ்வுகளின் தேவையை உணரவல்ல வ.உ.சி.யின் அரசியல் தெளிவையும் ஆற்றல் வாய்ந்த சொற்களின் மூலம் அதை வெளிப்படுத்தியமை அவருடைய மொழி ஆளுமையையும் புலப்படுத்தும்.

திலகர் முறையே 1893ஆம் வருஷத்திலும், 1895ஆம் வருஷத்திலும் ஏற்படுத்திய கணபதி உற்சவமும், சிவாஜி உற்சவமும் மகாராஷ்டிர தேசத்து ஜனங்களிடையே தேசாபி மானத்தை யும், தேசிய உணர்ச்சியையும் உண்டாக்கின. திலகர் தமது உள்ளுணர்ச்சியை இந்து மதத்திலிருந்தே கொண்டார்; அதனால் அவர் ஆசாரச் சீர்திருத்தம் அல்லது இராஜீய விஷயங்கள் சம்பந்தமான தேசிய இயக்கம் இந்துமதக் கோட்பாடுகளை ஆதாரமாகக் கொண்டிருக்க வேண்டுமென்று விரும்பினார். இந்த நோக்கத்துடனே தான் அவர் கணபதி உற்சவத்தை ஆரம்பித்தார். சில வருஷங்க ளுக்குள் இந்த உற்சவம் ஒரு தேசிய ஸ்தாபனமாய்விட்டது. சிவாஜி உற்சவமும் அதே மாதிரியான நோக்கத்துடனே உண்டு பண்ணப்பட்டது. அதே மாதிரியாக ஜனங் களை ஒற்றுமைப்படுத்தும் செல்வாக்கைக் கொண்டிருந்தது. இந்த உற்சவங்களின் பயனாக மகாராஷ்டிர தேசத்து ஜனங்களி டையே வளருகின்ற ஒற்றுமையும் சகோதரத் துவமும் அதிகார வர்க்கத்தினருக்கு ஒரு பெரிய மனக்கலக்கத்தை உண்டு பண்ணின; அதனால் அவர்கள் இந்த இயக்கத்தை மிக ஜாக்கிரதையாகக் கண்காணிக்கத் தொடங்கினர்.[19]

திலகர் தொடங்கிய கணபதி விழாவும் சிவாஜி விழாவும் சிதறிக் கிடந்த மக்கள் கூட்டத்தை ஓரிடத்தில் ஒன்று சேர்க்கவும் அவர்களிடையே ஒற்றுமை உணர்வை ஏற்படுத்தவும் பயன்பட்டன. விடுதலை இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றுவதற் கான திலகரின் முயற்சியின் முதல் கட்டமாக முதல் வெற்றியாக இது அமைந்தது.

1896-97இல் ஏற்பட்ட பஞ்சமும் அது குறித்த ஆங்கில அரசின் அலட்சியப் போக்கும் விடுதலை இயக்கம் மக்கள் இயக்கமாக

மாறக்கூடிய அடுத்த கட்டம் உருவாகக் கூடிய சூழலை உருவாக்கின. திலகர் இதை உரியமுறையில் பயன்படுத்தினார் என்கிறார் வ.உ.சி.

"திலகர் ஓர் ஒழுங்கான வழியில் கிளர்ச்சியை நடத்தினார். ஜனங்களுக்குள் ஆண்மையையும் தைரியத்தையும் புகுத்தினார். ஜனங்கள் தங்கள் நிலங்களை விற்றுத் தீர்வை செலுத்த வேண்டுவது அவசியம் இல்லையென ஜனங்களுக்கு அவர் சொன்னார். அவர் முயற்சிகள் விசேஷ வெற்றி தந்தன. ஜனங்கள் அவரால் நடத்தப்படுவதற்குச் சித்தமுடையவர்களாகி, அவர் சொல்லியபடி நடந்து வந்தார்கள். ஜனங்களுடைய இந்த விழிப்பிலிருந்து திலகர் இராஜீய சுதந்திரத்திற்கு அவசியமான இராஜீய நிருமான வேலைக்கு உபயோகப் படத்தக்க ஏராளமான சக்திகள் தமது தேசத்து மக்களிடம் இருப்பதைப் பிரத்தி யக்ஷமாகக் கண்டார்".[20]

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவின் தலைமை ஆளுநராக இருந்த கர்சன் என்றும் மறக்க இயலாதவர். இந்திய விடுதலை இயக்கத்தில் புதிய எழுச்சி தோன்றுவதற்கு அவரை அறியாமலே காரணமானவர், அவரைப் பற்றி வ.உ.சி. தரும் தகவல்கள் கர்சனைப் பற்றிய ஒரு மதிப்பீட்டை உருவாக்குவதோடு வ.உ.சியின் தமிழ் நடையின் ஆற்றலையும் வரலாற்று ஆசிரியராக அவருடைய நடுநிலைப் பண்பை யும் வெளிப்படுத்துவனவாக அமைகின்றன.

வங்கப் பிரிவினையை ஒரு பின்னோட்டமாக முப்பதுகளில் எண்ணிப் பார்க்கும்போது, அப்பிரிவினை உருவாக்கிய எழுச்சியை நேரில் கண்டு அதில் கலந்து மூழ்கியவரான வ.உ.சி.க்கு அந்நிகழ்ச்சி, 'விடுதலை இயக்க வரலாற்றில்' ஏற்படுத்திய மகத்தான மாற்றங்களை நினைவு கூர்தல் என்பது எளிதாக இருந்தது. அதனால்தான், தீய உடையில் வந்த நன்மை என்று கூற முடிந்தது. எளிய சொற்கள், ஆனால் மிகப்பெரிய வரலாற்று உண்மையை உள்ளடக்கிய பெருஞ்சிறப்பு. வ.உ.சி.யின் நடைச்சிறப்பை, வெளிப்பாட்டுத் திறனின் மேன்மையைப் பறைசாற்றுகின்றன.

திலகரின் எண்ணங்களை எழுதும்போது, ஆழ நினைந்து தம்முடைய எழுத்துகளில் திலகர் தக்கவாறு வெளிப்படுமாறு எழுதும் வல்லமை திலகரின் ஆளுமையைப் புலப் படுத்தும் திறமையை வ.உ.சி. தம் கட்டுரையின் ஊடே வெளிப்படுத்தியுள்ளார். திலகருடையதும் தம்முடையதுமான சமகால வரலாற்றை முழுமையான வரலாற்று உணர்வோடும் வாழ்க்கை வரலாற்றுத் தன்மை குன்றாமலும் 'இது ஒரு தேவை யில்லாத செய்தி', 'தொடர்ச்சி இதனால் தடைபடுகிறது' என்பன போன்ற எண்ணங் களோ, சோர்வோ படிப்போர் மனங்களில் எழாவண்ணம் சுவையோடும் விறுவிறுப் போடும் எழுதியிருப்பது வ.உ.சி.யின் கட்டுரை வன்மையைக் காட்டுகிறது.

நாட்டின் அன்றைய பொதுவான சூழலோடு இயைந்து திலகரின் வாழ்க்கையும் எப்படி வளர்ந்தது, படிப்படியான மாற்றங்களைக் கண்டது, தனித்தன்மையோடு கூடிய திலகரின் தலைமையை இந்த நாடு எப்படிப் பெற முடிந்தது, அதற்கான திலகரின் உழைப்பு, அந்த நிலையை அடைய அவர் மேற்கொண்ட முயற்சிகள், நிகழ்த்திய போராட்டங்கள், அடைந்த இன்னல்கள் இவையெல்லாம் விரிவாகவும் தெளிவாகவும் படிப்பவர் மனங்களை ஈர்க்கும் விதமாகவும் வ.உ.சி.யால் சொல்லப்பெற்றுள்ளன என்பது தான் 'திலக மகரிஷியின் வரலாறு' என்னும் இந்த நெடிய கட்டுரைத்தொடரின் தனிச் சிறப்பாகும்.

விடுதலை இயக்க வரலாறு பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் மெல்ல மெல்ல படிப்படியாக உருவாகி வளர்ந்த தன்மையைத் திலகரின் வாழ்க்கை வரலாற்றின் ஊடே மிகப் பொருத்தமாகவும் நேர்த்தியாகவும் விவரித்துள்ளார் வ.உ.சி.

விடுதலை இயக்கத்தின் பல்வேறு படிநிலை களையும் அதன் போக்குகளையும் திசை மாற்றங்களையும் இத்தொடரில் வ.உ.சி. மிகத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார். திலகரின் வரலாறு என்றாலும், அன்றைய இந்திய அரசியல் சூழலையும் தேவைக்கு ஏற்ப விளக்கும் பான்மை, சுவை கூடாமலும் குறையாமலும் தேவையான அளவு மட்டும் சொல்லப்பெறும் விதம் இவையெல்லாம் திலகர் வரலாற்றுத் தொடரின் சிறப்புகளாக அமைந்துள்ளன.

“கோக்கலே மிதவாதத் தலைவர், திலகரின் சீடரான வ.உ.சி.யோ தீவிரவாதி; கோக்கலேயைக் கடுமையாக எதிர்த்தவர். கோக்கலே மறைந்த அன்று புனாவில் இருந்தும் திலகர் வற்புறுத்தியும் இறுதி அஞ்சலிக்குச் செல்ல மறுத்தவர்”.[21]

பல இடங்களில் கோக்கலேயின் சிறப்புகளை மறவாமல், தயங்காமல் குறித்துள்ளார். சான்றுக்கு ஒன்று காணலாம். "மிஸ்டர் கோக்கலே தலைவராயிருந்து நடத்திய காசிக் காங்கிரசுக்குத் திலகர் சென்றார். தலைவருடைய உபன்னியாசம் மிகமிக ஊக்கத்தை அளிக்கக்கூடிய அக்காலத்து உபன்னியாசங்களில் ஒன்றாயிருந்தது. லார்டு கர்சனுடைய நிர்வாகத்தைக் காங்கிரஸ் தலைவர் காரமாகக் கண்டித்ததுபோல வேறு எவரும் கண்டித்ததில்லை"[22] என்பது குறிப்பிடத்தக்கது.

## முடிவுரை

வ.உ.சி. அவர்களின் கட்டுரையாக்கங்கள், ஆன்மிகம், அரசியல், வாழ்க்கை வரலாறு என்ற முத்திறப் பகுதிகளின் வளர்ச்சி நிலையில், குறிப்பிடத்தக்க இடம் பெற்றுத் திகழ்கின்றன. வ.உ.சி. என்ற அரசியல் அறிஞர், புறத்தே விடுதலைப் போரின் முதன்மைத் தலைவராய்ப் போராடிக் கொண்டிருக்க, அகத்தே வ.உ.சி. என்ற தமிழறிஞர் தமிழ் இலக்கண இலக்கியச் சிந்தனைகளில் தம்மை மறந்து ஈடுபட்டு வந்திருக்கின்றார். வழக்கறிஞர் தொழிலாற்றி வாதம் புரிந்து கொண்டிருந்த வேளைகளிலும், தமிழ்நூல்களைப் படித்துணர்ந்து மகிழும் இலக்கியத் தொழிலையும் இடையறாது போற்றி வந்துள்ளார் என்பதையும் புரிந்து கொள்ள முடிகின்றது.

## அடிக்குறிப்புகள்

1. என். சம்பத், பெ சு.மணி, வ.உ.சிதம்பரம் பிள்ளை, ப.57
2. கடவுள் ஒருவரே, விவேகபாநு. பிப்ரவரி 1901, பக்.126
3. சுதேசபிமானம், விவேகபாநு, 1906, பக். 470
4. ஞானபாநு, திங்களிதழ், தொகுதி–1, 1913, பக்.7
5. மேலது; பக்.9
6. மேலது; பக். 9
7. மேலது; பக். 52
8. மேலது, ப. 53
9. சுதேசாபிமானம், விவேகபாநு, பிப்ரவரி 1906, பக்.45
10. மேலது, பக்.49.
11. மேலது, நவம்பர் 1906. பக்.295.
12. மேலது, பக்.297.
13. Reminiscences of Lokamanya Tilak, vol–III,P-158.
14. வீரகேசரி 28.5.1933
15. மேலது
16. மேலது,11.6.1933,
17. மேலது, 2.7.1933
18. மேலது, 11.6.1933
19. மேலது, 8.10.1933
20. மேலது, 24.9.1933
21. Reminiscences of Lokamanya Tilak, vol.III, P.160
22. வீரகேசரி. 11.3.1934

## துணைநூற்பட்டியல்

1. வ.உ.சிதம்பரம் பிள்ளை, வ.உ.சி. கட்டுரைகள், பத்திரிகை: வீரகேசரி (இலங்கை), நூல் தொகுப்பாசிரியர்: முனைவர் மா.இரா.அரசு. டாக்டர் மா. இராசமாணிக்கனார் இதழியல் ஆய்வு மையம் வெளியீடு, சென்னை, காலம்: 1933-34 (தொடர்), 2009-2010 (நூலாக).
2. சம்பத், என்., வ. உ. சிதம்பரம் பிள்ளை, மணி, பெ.சு., செய்தி ஒலிபரப்பு அமைச்சகம், இந்திய அரசு, புதுதில்லி, 1995.
3. சிதம்பரம் பிள்ளை. வ.உ.சி. கட்டுரைகள், பாரி நிலையம், மா.ரா.அரசு. (தொகுப்பாசிரியர்), சென்னை, 1989

## இதழ்கள்

1. விவேகபாநு (குற்றாலம்), திங்களிதழ், தொகுதி - 1, 1900-1901
2. விவேகபாநு (மதுரை), திங்களிதழ், தொகுதி - 2, 1902, தொகுதி – 5, 1906 தொகுதி– 6, 1907
3. ஞானபாநு, திங்களிதழ், தொகுதி – 1, 1913, ப.7
4. Bapat.S.V., - Reminiscences of Lokamanya Tilak – Vol.III, Poona, 1928
5. தினமணி, வைரவிழா ஆண்டு மலர், 1994.
6. வ. உ. சிதம்பரனார் நூற்றாண்டு விழா மலர், 1972.
7. விடுதலை வீரர் வ.உ.சி., நூற்றாண்டு விழாச் சிறப்பு மலர், கோவை,1972.